# அமலோற்பவ மாதா தேவாலயம்

9 ஜாலான் கெரேஜா, 80100 ஜோகூர் பாரு, ஜோகூர், மலேசியா
Tel: +607-2243034 & H/P: +60 11-5868 3303
Parish Email: office@cicjb.org / Website: www.cicjb.org
Facebook: www.facebook.com/cicjb.official
Diocesan Website: www.mjdiocese.my

| | | | பங்கு அலுவலக நேரம் |
|---|---|---|---|
| பங்கு அருள்தந்தை | Rev. Fr.Claurence Motoyou, Ofm | +6016 – 834 1211 | திங்கள் ஓய்வு நாள் |
| பங்கில் வசிக்கும் அருள்தந்தை | Rev. Fr. Leo Elias | +6011-5580 1626 | செவ்வாய்-வெள்ளி 9am – 5.00pm |
| நிரந்தர திருத்தொண்டர் | Deacon Sherman Kuek OFS | +607 - 224 3034 | சனி 9am – 4.00pm |
| கன்னித்துறவி | Sr.Maria Goretti Heng CSCM | +60 11 - 26721120 | ஞாயிறு 8.30am – 12.00pm |
| குமஸ்தா | Ms. Doreen Sim | +607 - 224 3034 / +60 11-5868 3303 | மதிய உணவு நேரம் 12.00pm – 1.00pm |
| துணை குமஸ்தா | Ms. Jean M. Lopez | | |
| கணக்காளர் | Ms. Olivia Yee | | |
| இறப்பு அடக்க ஒருங்கிணைப்பாளர் | Mr. Patrick Tan | +6012 - 786 7280 | |

MASS TIMES

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வார நாட்கள் திருப்பலி | ஆங்கிலம் | | | | |
| | திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை – காலை மணி 7.15 | | | | |
| | பெருவிழா நாட்கள் அல்லது சிறப்பு நாட்கள் திருப்பலிகள் காலை மணி 6.30-க்கு நடைபெறும்.. | | | | |
| வார இறுதி நாட்கள் திருப்பலிகள் | மாதத்தின் முதல் சனிக்கிழமை திருப்பலி காலை மணி 7.15-க்கு நடைபெறும் | | | | |
| | மலாய் | ஆங்கிலம் | | மெண்டரின் | தமிழ் |
| | சனிக்கிழமை 4PM | சனிக்கிழமை 6.30PM | ஞாயிறு 7.30AM | ஞாயிறு 10.30AM | ஞாயிறு 5PM |
| மாதத்தின் 3ஆம் ஞாயிறு புலம் பெயர்ந்தோர் திருப்பலி மதியம் மணி 12.00-க்கு நடைபெறும் | | | | | |

1. திருப்பலி காணிக்கை: 04 & 05 ஜூலை 2026 மொத்தம் RM8,776.15 – உங்கள் காணிக்கைகளுக்கு நன்றி



| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலாய் 4PM | RM1,725.30 | ஆங்கிலம் 6.30PM | RM2,035.95 | | |
| ஆங்கிலம் 7.30AM | RM2,385.90 | மெண்டரின் 10.30AM | RM1,912.00 | தமிழ் 5PM | RM717.00 |

2.

| | | |
|---|---|---|
| காணிக்கை – நீங்கள் ஆலயப் பணிக்காக காணிக்கை செலுத்த விரும்பினால், பின்வரும் கருத்துகளுக்காகவும் தேவைகளுக்காகவும் கொடுக்கலாம்: | | |
| 1. பொது | 2. திருப்பலி கருத்துக்கள் | 3. ஏழைகளுக்கு |
| 4. ஆலய பராமரிப்பு | 5. லார்கின் கல்லறை பராமரிப்பு | 6. குடும்ப மாதாந்திர சந்தா தொகை |

பங்கு அலுவலகத்தில் உங்கள் காணிக்கைகளைக் கொடுக்கலாம். அல்லது மின் பண பரிமாற்றத்தின் (e-transfer) வழியாகவும் நீங்கள் உங்கள் காணிக்கைகளை அனுப்பி வைக்கலாம். நீங்கள் கொடுத்த காணிக்கையின் விபரத்தை எழுத மறவாதீர்கள். எடுத்துக்காட்டாக பொது கருத்துக்காக நீங்கள் காணிக்கை செலுத்த விரும்பினால், "பொது" என்று குறிப்பிடவும். நீங்கள் கொடுத்த காணிக்கைக்குப் பங்கு ரசீது தேவைப்பட்டால், நீங்கள் செய்த பண பரிமாற்றத்தின் ரசீதை - office@cicjb.org என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

**Beneficiary Account Name: CHURCH OF THE IMMACULATE CONCEPTION**
**Beneficiary Bank: Public Bank Berhad**
**Beneficiary Account No: 3099421333**

3.

| முதியோர் மறைக்கல்வி (RCIA) ஒருங்கிணைப்பாளரின் தொடர்பு எண்கள் | | |
|---|---|---|
| தமிழ் | Mr. Thomas Marisuseh | +6016-757 9474 |
| ஆங்கிலம் | Ms Emmy Jong | +6017-360 5400 |
| மலாய் | Ms. Margarette | +6011-2587 8548 |
| மெண்டரின் | Mr. Matthew | +60 13-968 9538 |

## இவ்வார அறிவிப்புகள்

4. முதியோர் மறைக்கல்வி வகுப்பு (RCIA Class)
இந்த வருடத்திற்கான (2026–2027) முதியோர் மறைக்கல்வி வகுப்பு (RCIA) தொடங்கப்பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம். RCIA வகுப்பு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் 3.00 மணி முதல் 4.30 மணி வரை பங்கு மண்டபத்தின் அறை எண் 7-ல் நடைபெறும். மேல் விபரங்களுக்கு திரு. தோமஸ் மரியசூசை அவர்களை +60167579474 என்ற எண்ணில் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

5. குழந்தைக்களுக்கான திருமுழுக்கு @ நேரம்: காலை 10.00 – 11.00 மணி
ஆங்கிலம் – முதல் சனிக்கிழமை // மலாய் – இரண்டாம் சனிக்கிழமை
தமிழ் – மூன்றாம் சனிக்கிழமை // மன்டரின் – நான்காம் சனிக்கிழமை
(அருட்பணியாளர் அவர்களின் வசதிக்கு ஏற்ப மாற்றம் இருக்கலாம்);
மேலும் தகவல்களுக்கு, பங்கு அலுவலகத்தை அணுகவும்.

6. திருமணம் செய்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள், குறைந்தது 6 மாதத்திற்கு முன்பதாக பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவேண்டும். அதன்பின் குருவானவரை சந்தித்தப்பின் திருமணத்திற்கான ஏற்பாடு செய்யலாம். குறிப்பாக, நீங்கள் கத்தோலிக்க திருமண முன் தயாரிப்புப் பயிற்சியில் கட்டாயமாக கலந்துக்கொள்ள பதிவு செய்யவேண்டும்.

7. சுத்தம் மற்றும் சுகாதாரம் பங்கு மக்களின் கவனத்திற்கு,தேவாலயம் மற்றும் தேவாலய வளாகங்களை சுத்தமாக வைத்திருக்க உங்கள் உதவி எங்களுக்குத் தேவை. தயவுசெய்து தேவாலயத்திற்கு உள்ளேயும் வெளியேயும் குப்பைகளை வீச வேண்டாம். வழங்கப்பட்ட குப்பைத் தொட்டிகளில் அவற்றை எறியுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

8. வாராந்திர திருப்பலிப் பாடல் பயிற்சி - ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இரவு 8:00 மணி முதல் 9:45 மணி வரை தேவாலயத்தில் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். பாடுவதிலும் இசைக்கருவிகளை வாசிப்பதிலும் ஆர்வமும் அழைப்பும் உள்ள அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம். மேல் விவரங்களுக்கு திரு. தோமஸ் அவர்களை +60167579474 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

9. பங்கு அறைகள் முன்பதிவுகள் - உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், முன்பதிவு செய்யப்பட்ட பங்கு அறைகளை ரத்து செய்ய விரும்புவோர், 3 நாட்களுக்கு முன்னதாக பங்கு அலுவலகம் மூலம் மட்டுமே ரத்து செய்ய முடியும். இருப்பினும், முன்பதிவு செய்வதற்கான திகதிகள் அல்லது நேரத்தை உறுதிப் படுத்தியவுடன் மாற்ற முடியாது. மாற்ற வேண்டிய அவசியம் இருந்தால், அந்த முன்பதிவை ரத்து செய்துவிட்டு, புதிய விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு வாரமும் அறை முன்பதிவு பட்டியல் அட்டவணையை நமது பங்கு அறிவிப்பு பலகையிலும் மற்றும் www.cicjb.org இணையத்தளத்திலும் காணலாம். நீங்கள் விண்ணப்பித்த அறையின் முன்பதிவு அட்டவணையில் இல்லையென்றால், பங்கு அலுவலகத்தை தொடர்புக்கொள்ளவும்.

10. புகழ் ஆராதனை – அருங்கொடை செபம் (P&W):
எதிர்வரும் ஜூலை 17, 2026 வெள்ளிக்கிழமை இரவு 8.00 மணிக்கு, CIC, JB புனித மரியாள் மண்டபத்தில் நடைபெறும். வாழ்க்கையின் பரபரப்புகளிலிருந்து ஓய்வு பெற்று, இறைவனின் பிரசன்னத்தில் அமைதியையும் ஆறுதலையும் அனுபவிக்க வாருங்கள். புகழ் ஆராதனையில் இணைந்து இறைவனை மகிமைப்படுத்துவோம். அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

**திருத்தந்தையின் ஜூலை மாதத்திற்கான செப நோக்கம்:**
**மனித உயிருக்கு மரியாதை செலுத்துவதற்காக**
கடவுளின் கொடையாக வழங்கப்பட்ட மனித உயிரை அதன் அனைத்து நிலைகளிலும் மதித்து, பாதுகாக்க வேண்டுமென நாம் செபிப்போம்.